# ஆசரிப்பு கூடாரத்தில் இருந்து வெளிச்சம்




பாடம் 8 மே 25, 2024



"மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு." (எபிரேயர் 8:1, 2)

70 வார மற்றும் 2300 நாட்கள் தீர்க்கதரிசனங்களின் படி, 1844ல் இயேசு வராத போது, தீர்க்கதரிசனங்களை திருப்பி பார்ப்பது அவசியமானது. அவர்கள் இதை கண்டறிந்தார்கள்:




பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல் என்பது இயேசுவின் இரண்டாம் வருகை அல்ல. தானியேல் 8:14 தானியேல் 7:9-10ல் உள்ள நியாயத்தீர்ப்பும் ஒரே சம்பவத்தை அறிவிக்கிறது, எந்த பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட வேண்டும்? மறுபுறம், 1844ல் என்ன விசாரணை தொடங்கியிருக்கலாம்?

- உண்மையான பரிசுத்த ஸ்தலம்.
- சுத்திகரிக்கப்படுதல்.
- நியாயத்தீர்ப்பு.
- கிருபையும் நீதியும்.
- வழக்கறிஞர் மற்றும் பரிந்து பேசுபவர்.

# உண்மையான பரிசுத்த ஸ்தலம்

"பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு." (எபிரேயர் 8:2)

**சுத்திகரிக்கப்படவேண்டிய பரிசுத்த ஸ்தலம் பூமி இல்லையென்றால் அது வேறு என்ன?**





**வேதத்தை படிக்கும்போது, 1844 ஏமாற்றத்திற்கு பின்பு வந்த அட்வந்து சபையினர் இரண்டு ஆசரிப்பு கூடாரம் இருப்பதாக கண்டறிந்தனர்:**

- **பூலோக ஆசரிப்புக் கூடாரம், உண்மையானதின் நிழல் மற்றும் உருவம் (எபி. 8:5)**
- **பரலோக ஆசரிப்புக் கூடாரம், தேவனால் நிறுவப்பட்டது (எபி. 8:2)**

**முதல் ஆசரிப்புக்கூடாரம், மற்றும் கிபி 70 வரை கட்டப்பட்ட ஆலயங்கள், மோசேக்கு தேவன் காட்டிய மாதிரியின்படியே கட்டப்பட்டது (யாத். 25:40). அதில் உண்மையான ஆட்டுக்குட்டியும் பிரதான ஆசாரியரும் இயேசுவையே பிரதிபலிக்கின்றன (யோ . 1:36; எபி. 4:14).**



**முதலாவது, நம்முடைய பாவத்தின் குற்றம் நீங்க இயேசு தம்மையே ஒப்புக்கொடுத்தார் (ரோ. 5:8); மற்றும், இரண்டாவதாக, நமக்காக அவர் பரிந்துபேசுகிறார், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்கிறார், மற்றும் நம்முடைய இரட்சிப்பையும் பாதுகாக்கிறார் (எபி . 7:25).**





# பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல்



“இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்.” (லேவி. 16:16)

இஸ்ரவேலர்கள் தங்கள் பலிகளிலினால் மன்னிக்கப்பட்ட போதிலும், அவர்களுடைய குற்றவுணர்வு ஆசரிப்புக் கூடாரத்திற்கு “மாற்றப்பட்டது”. ஆகவே, அதின் சுத்திகரிப்பு அவசியமாய் இருக்கிறது. இது இன்றும் எபிரேயர்களிடையே நியாயத்தீர்ப்பின் நாளாக அறியப்பட்டிருக்கிறது, இது பாவநிவிர்த்தியின் நாளில் நடந்தது.



ஒவ்வொருவரும் தங்கள் ஆன்மாவை தாழ்த்த வேண்டும் (லேவி. 23:27)



மதசார்பற்ற நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளபடவில்லை (லேவி. 23:28)



பிரதான ஆசாரியர் ஆசரிப்புக்கூடாரத்திற்குள்ளாக தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைகிறார் (லேவி. 16:12-13)



உடன்படிக்கைப் பெட்டி, திரை மற்றும் பொற்பலிபீடம் எல்லாம் ஆட்டின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டது (லேவி. 16:15-19, 33)



மற்றொரு உயிருள்ள ஆடு எல்லாருடைய அக்கிரமத்தையும் சுமந்து கொண்டு பாளயத்துக்கு புறம்பாக அனுப்பப்பட்டது(லேவி. 16:20-22)



இறுதியில் அவர்கள் பாவங்களற கழுவி சுத்திகரிக்கப்பட்டார்கள் (லேவி. 16:30)

அந்த நாளில் தன்னை தாழ்த்தாத, தன் பாவத்தை அறிக்கைசெய்யாத, யாராக இருந்தாலும் தன் ஜனத்தில் இராதபடி “அறுப்புண்டு போவான்” (லேவி. 23:29-30). அவனுடைய விதி அன்றே முத்தரிக்கப்படும். அதே வகையில், பரலோக ஆசரிப்புக் கூடாரத்தின் சுத்திகரிப்பு நிறைவாகும் போது, நம்முடைய விதியும் முத்தரிக்கப்படும். இதற்கிடையில், இன்றே நம்மை தாழ்த்தக்கூடிய நாள், நாம் முடிவெடுக்க வேண்டிய நாள் (எபி. 3:14-15).

# விசாரணை





"மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்." (வெளிப்படுத்தல் 14:7)

**தீர்க்கதரிசனத்தின்படி, பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் சுத்திகரிப்பு – அதாவது, நியாயத்தீர்ப்பு– 1844ல் துவங்கிவிட்டது. அதுமுதல், நியாயத்தீர்ப்பின் வேளை வந்தது என்று சொல்லி அட்வந்து திருச்சபையினர் சத்தமாக அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள், தேவனை தொழுதுகொள்ளும்படியும், கற்பனைகளின் வாழும்படியும் அனைவருக்கும் அழைப்புக் கொடுக்கப்படுகிறது.**





**ஆனால் இயேசு வரும்போது பூமியில் நியாயத்தீர்ப்பு நடைபெறாதா (1நாளா. 16:33; 2தீமோ. 4:1)?**

**இயேசு வரும்போது, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்ப்பை அவர் நிறைவேற்றுவார், ஏனென்றால் "அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்று இயேசு கூறுகிறார்(வெளி. 22:12 ); தெரிந்துகொள்ளப்பட்டவர்களை ஒன்று திரட்டும்படி தம் தூதர்களை அவர் அனுப்புகிறார் (மத். 24:31); தம்மேல் விசுவாசம் வைத்தவர்களை உயிர்த்தெழ செய்கிறார் (1தெச. 4:16). இயேசு வரும்போது அவிசுவாசிகள் உயிர்த்தெழ போகிறதில்லை, ஏனென்றால் அவர்கள் அந்நேரத்தில் நியாயந்தீர்க்கபடவில்லை (வெளி. 20:4-5).**

# கிருபையும் நீதியும்

"கிருபையினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும்; நியாயம் விசாரித்துத் துரிதமாய் நீதிசெய்கிற ஒருவர் அதின்மேல் தாவீதின் கூடாரத்திலே நியாயாதிபதியாய் உண்மையோடே வீற்றிருப்பார்." (ஏசாயா 16:5)

உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்ட 10 கற்பனைகள் நியாயத்தீர்ப்பின் தரத்தையும் தெய்வீக நீதியையும் பிரதிபலிக்கிறது (பிர . 12:13-14 ). நியாயபிரமாணத்துக்கும் தேவப் பிரசன்னத்துக்கும் நடுவாக இருக்கிற கிருபாசனம் தெய்வீக கிருபையை பிரதிபலிக்கிறது. (1யோ. 2:1-2).



**அவருடைய இரத்தம் சர்வாங்க பலிபீடத்தின் மேல் தெளிக்கப்பட்டது**



பரலோக ஆசரிப்பக்கூடாரத்துக்கான பாதை இயேசுவின் தியாகபலியை ஏற்றுக்கொள்வதிலிருந்து தொடங்குகிறது

**அவருடைய இரத்தம் தூபபீடத்தின் மேல் தெளிக்கப்பட்டது**



கிறிஸ்துவோடுகூட இருக்கிற ஐக்கியத்தில் நம் வாழ்வு தொடரட்டும்

**அவருடைய இரத்தம் உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக இருக்கக்கூடிய திரையில் தெளிக்கப்பட்டது**



நம் வழக்கு அந்த நீதிபதிக்கு முன் சமர்பிக்கப்படும் போது நம் வாழ்வு நிறைவடையும்




நியாயப்பிரமாணத்தின்படி நீதி வழங்கப்படும். நம் வாழ்க்கைக்கு பதிலாக இயேசுவினுடைய பூரணமான வாழ்க்கை கிருபையினாலே ஏற்றுக்கொள்ளப்படும் (1 பேது. 1:18-19). "நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது;" (1யோ. 4:17).

# வழக்கறிஞர் மற்றும் பரிந்துபேசுபவர்

"மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்." (எபிரேயர் 7:25)

தேவையுள்ள இந்த உலகத்திற்கும் நோக்கி பார்த்துக் கொண்டிருக்கிற அண்ட சராசரத்திற்கும் தேவ அன்பை இயேசுவின் வாழ்க்கை வெளிப்படுத்தியது. அவருடைய மரணம் பாவத்தின் அருவருப்பை வெளிப்படுத்தியது மற்றும் மனிதகுலத்திற்கும் இரட்சிப்பை வெளிப்படுத்தியது. பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் அவருடைய பரிந்துபேசுதல், பாவநிவாரணத்தின் பலன்களை விசுவாசத்தில் அடையும் ஒவ்வொருவருக்கும் வழங்குகிறது. நம் வாழ்வு முழுவதும், நியாயத்தீர்ப்பின் நேரத்திலும், இயேசுவே வழக்கறிஞராக இருக்கிறார் (1யோ. 2:1).











பரலோக பரிசுத்த ஆசரிப்புக்கூடாரத்தில் இயேசுவினுடைய வேலை பின்வரும் காரியங்களை நமக்கு கற்பிக்கிறது:

- இரட்சிப்பின் திட்டத்தின் தெளிவான புரிந்துகொள்ளுதல்
- தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகள்
- நம் இரட்சிப்பின் முடிவில்லாத விலை
- பிதாவினிடத்தில் செல்ல இயேசு நமக்காக திறந்த பாதை
- தைரியமாக தேவனிடத்தில் சேருவதற்கான பாதுகாப்பு

விரைவில், நியாயத்தீர்ப்பு முடிவு பெறும், இயேசு "தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." (எபி. 9:28)

“நியாயத்தீர்ப்புக்கு ஞாபக புஸ்தகங்கள் திறக்கப்பட்ட போது, இயேசுவை விசுவாசித்த அனைவரின் வாழ்க்கையும் தேவனுக்கு முன்பாக மறுபரிசீலனைக்கு வந்தது. பூமியில் முதலாவது வாழ்ந்தவர்களிடமிருந்து தொடங்கி, நம் வழக்கறிஞர் ஒவ்வொரு அடுத்தடுத்த தலைமுறையின் வழக்குகளை முன்வைத்து, தற்போது வாழ்பவர்கள் வரை முடிக்கிறார்.

ஒவ்வொரு பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது, ஒவ்வொரு வழக்கும் மிக நெருக்கமாக பார்க்கப்படுகிறது. பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது, பெயர்கள் நிராகரிக்கப்பட்டது. [...]

உண்மையில் பாவத்தை அறிக்கையிட்டு, விசுவாசத்தினாலே கிறிஸ்துவின் இரத்தத்தை தங்கள் பாவநிவாரணபலியாக கோரிய, அனைவரின் பெயர்களுக்கு அருகில் பரலோக புஸ்தகங்களிலே மன்னிப்பு குறிப்பிடப்பட்டிருக்கிறது; அவர்கள் கிறிஸ்துவின் நீதியில் பங்காளிகளாகி, அவர்களின் குணாதிசயங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு இசைவாக இருப்பதைக் கண்டறிந்து, அவர்களின் பாவங்கள் அழிக்கப்படும், மேலும் அவர்களே நித்தியஜீவனுக்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்கள்.”

எலன் ஜி உவைட் (மாபெரும் ஆனமீக போராட்டம், பக். 483)

“நாம் இப்போது வெளிப் பிரகாரத்திலே நின்றுகொண்டு, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் மகிமையான வருகையின், அந்த பாக்கியமான நம்பிக்கைக்காக எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறோம். [...] நமது வழக்கறிஞராக அவரது பரிந்துரையில், கிறிஸ்துவுக்கு மனித நற்பண்பும், மனிதனின் பரிந்துரையும் தேவையில்லை. அவரே பாவத்தை சுமந்தவர், பாவத்துக்கான ஒரே பலி. ஜெபமும் பாவ அறிக்கையும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்த அவரிடம் மாத்திரமே ஏறெடுக்கப்பட வேண்டும். விசுவாசத்தோடு தம்மிடத்தில் வரும் அனைவரையும் முற்றிலுமாக இரட்சிப்பார். நமக்காக பரிந்துபேசுவதற்காக அவர் என்றும் வாழ்கிறார்.”

எலன் ஜி உவைட் (ஜீசஸ் அவர் அட்வகேட், நவம்பர் 1)